*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*02 10 2025 THURSDAY 7.15 PM*
*ஆகாஷவாணி*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

*1. தேசப்பிதா காந்தியடிகளின் வழியில் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவோம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.*

*2. தூய்மையே சேவை இயக்கம் வெற்றிபெறுவதற்கு மத்திய அரசின் அனைத்துத் துறைகளும் ஒத்துழைப்பு நல்கியதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.*

*3. ஆரோக்கியமான பெண்கள் – வலிமையான குடும்பம் இயக்கத்தின்கீழ், ஆறு கோடி பெண்கள் உட்பட ஒன்பது கோடிக்கும் மேற்பட்டோர் பயன்பெற்றுள்ளனர்.*

*4. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் பயனாளிகளின் சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கு நீதிமன்றத்திற்கு வெளியே சமரச தீர்வுகாண்பதற்கான திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது.*

*5. வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதல் இன்னிங்ஸ் ஆட்டநேர இறுதியில் 2 விக்கெட் இழப்பிற்கு 121 ரன் எடுத்துள்ளது.*

*<u>இனி விரிவான செய்திகள் ---</u>*

*<<<<<>>>>>>*

*தேசப்பிதா காந்தியடிகளின் வழியில் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவோம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.*

*காந்தி ஜெயந்தியையொட்டி, அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், வளர்ச்சியடைந்த மற்றும் உள்ளடக்கிய இந்தியாவை நோக்கிய கூட்டுப் பயணத்தில் காந்தியடிகளின் கோட்பாடுகளை உறுதியுடன் பின்பற்ற வேண்டும் என தெரிவித்துள்ளார்.*

*காந்தியடிகளின் நேர்மை, அகிம்சை உள்ளிட்ட சிந்தனைகள் உலகின் பல தலைமுறைகளுக்கும் ஊக்கம் அளித்து வருவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*<<<<<>>>>>>*

*தூய்மையே சேவை இயக்கம் வெற்றிபெறுவதற்கு மத்திய அரசின் அனைத்துத் துறைகளும் ஒத்துழைப்பு நல்கியதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் இன்று இந்த இயக்கத்தில் பங்குபெற்று பேசிய அமைச்சர், அரசு நிர்வாகத்திலும், மக்கள் சேவையிலும் பெரிய மாற்றங்களை தூய்மையே சேவை இயக்கம் கொண்டுவந்துள்ளதாக தெரிவித்தார்.*

*அரசு அலுவலங்களில் பல ஆண்டுகளாக தேங்கியிருந்த 137 லட்சத்திற்கும் மேற்பட்ட தேவையில்லாத கோப்புகள் கண்டறியப்பட்டு, அழிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.*

*தூய்மை இந்தியா இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றிய பிரதமருக்கு தமது நன்றியை தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.*

*இந்த இயக்கம் மக்களின் வாழ்வியல் முறையில் சீரிய மாற்றத்தை கொண்டுவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*மின்னணு கழிவுப்பொருட்களை விற்பனை செய்வதன்மூலம் கடந்த நான்காண்டுகளில் மத்திய அரசுக்கு 3 ஆயிரத்து 296 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.*

*<<<<<>>>>>>*

ஆரோக்கியமான பெண்கள் – வலிமையான குடும்பம் இயக்கத்தின்கீழ், ஆறு கோடி பெண்கள் உட்பட ஒன்பது கோடிக்கும் மேற்பட்டோர் பயன்பெற்றுள்ளனர்.

கடந்த இரண்டுவார காலமாக நடைபெற்றுவந்த இந்த இயக்கம் வெற்றிபெற்றுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளது.

மகளிருக்கான அதிகாரத்தை இந்த இயக்கம் உறுதி செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இயக்கத்தின்கீழ், நடத்தப்பட்ட 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முகாம்களில் வரலாறு காணாத அளவிற்கு அதிக அளவில் மக்கள் பங்கேற்று பயன்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவான ஆரோக்கிய பரிசோதனை, ரத்த சோகை, உடலில் உள்ள தாதுப்பொருட்களின் அளவு, ரத்த அழுத்தம் போன்ற பரிசோதனைகள் இந்த சிறப்பு மருத்துவ முகாம்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் பயனாளிகளின் சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கு நீதிமன்றத்திற்கு வெளியே சமரச தீர்வுகாண்பதற்கான திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, தொழிலாளர் ஈட்டுறுதிக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அண்மையில் சிம்லாவில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த திட்டம் தொடங்கிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் ஒன்றாம் தேதி தொடங்கி, அடுத்த ஆண்டு செப்டம்பர் 30-ஆம் தேதிவரை ஓராண்டு காலத்தில் தொழிலாளர் ஈட்டுறுதிக்கழகத்தில் இணைந்துள்ள பணியாளர்கள் மற்றும் காப்பீடுத்தாரர்கள் இந்த கழகத்துடன் சமரச பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண்பதற்கு வழி செய்யப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் பணியாற்றிய நிறுவனங்கள் ஐந்தாண்டுகளுக்குமேல் செயல்படாமல் இருந்தால், அதற்கான தீர்வுகாண இந்த திட்டம் வழிவகை செய்கிறது.

தொழில் நிறுவனம் மூடப்பட்டு ஐந்தாண்டுகளுக்குள் இருந்தால் அதற்கான ஆவணங்களை தொழிலாளர்கள் சமர்ப்பித்து, தீர்வை பெறுவதற்கும் வழி செய்யப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கு போதிய ஆவணங்கள் கிடைக்காதபட்சத்தில் அவர்கள் செலுத்திய சந்தா அடிப்படையில் குறைந்தபட்சம் 30 சதவீதம் வழங்குவதற்கும் இந்த புதிய தீர்வுத் திட்டம் வழிவகுக்கிறது.

சமரச தீர்வுக்காக வரும் அனைத்து வழக்குகளுக்கும் ஆறுமாத காலத்திற்குள் முறையான தீர்வுகாண்பதற்கும் புதிய திட்டம் வகை செய்கிறது.

<<<<<>>>>>>

மக்கள் தங்களது அன்றாட வாழ்வில் மகாத்மா காந்தியின் சிந்தனைகள் மற்றும் நற்பண்புகளை பின்பற்றுவது அவசியம் என்று ஆயுஷ்துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் வலியுறுத்தியுள்ளார்.

புனேயில் உள்ள தேசிய இயற்கை மருத்துவ கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், உலகம் முழுவதும் உண்மை, அமைதி, அகிம்சையை பரப்பியவர் மகாத்மா காந்தி என்று குறிப்பிட்டார்.

அவரது வாழ்க்கை அனைத்து தலைமுறையினருக்கும் ஊக்கம் அளிக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில், மகாத்மா காந்தி Webathon என்ற நூலையும் திரு பிரதாப் ராவ் ஜாதவ் வெளியிட்டார்.

<<<<<>>>>>>

தமிழக முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் 50-வது நினைவு தினத்தையொட்டி பல்வேறு தலைவர்கள் அவருக்கு புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், வளம் மிக்க தமிழகத்தை உருவாக்கும் உயரிய நோக்கோடு ஏராளமான அணைகளை கட்டி தொழில் வளம் பெருகச் செய்ததுடன், மதிய உணவு அளித்து கல்விக்கண் திறந்த காமராஜரின் நினைவுகளை இந்நாளில் போற்றி வணங்குவோம் என்று கூறியுள்ளார்.

<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரியில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக, இருசக்கர மற்றும் சிறிய வகை கார்களின் விலைகள் குறைய வழி ஏற்பட்டுள்ளது.

35 சி சி வரையிலான இருசக்கர வாகனங்கள் மற்றும் சிறிய வகை கார்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரி 28 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைந்துள்ளதால், அவற்றின் விலையும் குறைந்திருப்பது நடுத்தர மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக தமிழகத்தின் சேலம் மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

<<<<<>>>>>

ஆர் எஸ் எஸ் இயக்கம் 100 ஆண்டுகள் நிறைவு செய்திருப்பதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நாக்பூரில் நடைபெற்ற ஆர் எஸ் எஸ் நூற்றாண்டு விழாவில் அதன் தலைவர் திரு மோகன் பகவத் ஆற்றிய உரை உத்வேகம் அளிக்கும் வகையில் அமைந்திருந்ததாக கூறியுள்ளார்.

நாட்டை கட்டமைப்பதிலும், தொன்மையான நாகரீக பாரம்பரியத்தை மக்களிடையே பேணிகாப்பத்திலும் இந்த இயக்கம் சிறப்பான பங்காற்றி வருவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஆர் எஸ் எஸ் இயக்கத்திற்கு வாழ்த்து தெரிவித்து, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பன்முக தன்மை கொண்ட இந்தியாவின் வளர்ச்சிக்காகவும், நாட்டு மக்களின் ஒற்றுமைக்காகவும் சுதந்திரத்திற்கு முன்பிருந்தே ஆர் எஸ் எஸ் இயக்கம் சிறப்பாக பணியாற்றி வருவதாக தெரிவித்துள்ளார்.

ஆர் எஸ் எஸ் இயக்கம் 100 ஆண்டுகளாக தன்னலம் கருதாது அரும்பணிகளை ஆற்றி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த இயக்கத்தின் பணிகள் மென்மேலும் சிறப்பாக தொடர வேண்டும் என இறைவனிடம் வேண்டுவதாக டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, கடந்த ஐந்து நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அவாமி கூட்டு நடவடிக்கைக் குழுவை கட்டுப்படுத்த பாகிஸ்தான் அரசு மேற்கொண்ட நடவடிக்கையில் இன்று மேலும் ஒன்பது பேர் உயிரிழந்தனர். இவர்களில் மூன்று பேர் காவல்துறையினர், ஒருவர் செய்தியாளர் என்றும் கூறப்படுகிறது.

இலவச கல்வி, மருத்துவ வசதி, மற்றும் புலம்பெயர்ந்தவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 12 மாகாண கவுன்சிலுக்கான இடங்களை ரத்து செய்வது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, இந்த அமைப்பினர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த அமைப்பினர் Muzaffarabad, மிர்பூர். பூஞ்ச், நீலம், Bhimber, Palandri ஆகிய பகுதிகளில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

<<<<<>>>>>

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

***வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது முதல் இன்னிங்சின் ஆட்டநேர இறுதியில் 2 விக்கெட் இழப்பிற்கு 121 ரன் எடுத்துள்ளது.***

***அகமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியில், வெஸ்ட் இன்டீஸ் முதல் இன்னிங்சில் 162 ரன் எடுத்துள்ளது.***

***----------------***

***Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Srikanth காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.***

***ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-17, 25-23 என்ற செட் கணக்கில், இந்தியாவின் Siddhanth Gupta-வை வென்றார்.***

***இப்போட்டியில், மிதுன் மஞ்சுநாத், Dayanand Shimoga ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.***

***மகளிர் ஒற்றையர் பிரிவில், Tasnim Mir, Tanya Hemanth, Devika Sihag, Shriyanshi Valishetty, Anupama Upadhyaya ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.***

***-------------***

***பிரிஸ்பேனில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 58 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.***

***<<<<<END>>>>>>***